மக்களின் நாளேடு
விலை ரூபா:- 4 : 50

# முரசொலி

முரசு 08 ஒலி 183 பிரசோற்பத்தி வைகாசி 16 (30-05-1991) வியாழன்

## திருமலை கிராமங்களில் படையினர் கெடுபிடி அதிகரிப்பு

திருமலையில் பொதுமக்கள் மீதான படையினரின் கெடுபிடிகள் அதிகரித்து வருகிறது. நேற்று முன்தினம் கந்தளாய் பதிச்சான் முகாம் இராணுவத்தினர் அதிகாலை நான்கு மணியளவில் கவித்தீவை சுற்றி வளைத்தனர். அப்பகுதியில் இரண்டு மாணவர்களையும், வயது வயோதிபர் ஆகியோரை படையினர் கைது செய்தனர். சித்திரவதைக்குள்ளாக்கப்பட்ட இவர்கள் பின்னர் விடுவிக்கப்பட்ட போதிலும் இரு மாணவர்களும் தொடர்ந்து படையினரால் தடுத்து வைக்கப்பட்டனர். இதேபோன்று கடந்த வியாழனன்று கிளிவெட்டி முகாம் படையினர் கிளிவெட்டிக் கிராமத்தைச் சுற்றிவளைத்தனர். இப்பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் கைதானார். பின்னர் இவர் சுட்டுக்கொல்லப்பட்டு வீதியில் வீசப்பட்டுக்கிடந்தார். இரு தினங்களின் பின் நிலாவெளிப் பகுதி இராணுவத்தினர் தங்கவேலிக் கிராமத்தைச் சுற்றிவளைத்தனர். இக்கிராமத்தில் அறுவர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் மூவர் விடுவிக்கப்பட்ட போதும் ஏனைய மூவரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

# காங்கிரஸின் புதியதலைவராக

# பி.வி. நரசிம்மராவ் தெரிவு

### ★ தேர்தல் முடியும்வரை இடைக்காலத் தலைவர் ★

இந்திரா காங்கிரஸின் புதிய தலைவராக பி. வி. நரசிம்மராவ் (69) நேற்றுத் தெரிவாகினார். நேற்று மாலை புதுடில்லியில் நடைபெற்ற காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் இவர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அடுத்த மாதம் நடைபெறவுள்ள மத்திய சட்டத் தேர்தலில் நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரஸ் போட்டியிடவுள்ளது.

எனினும் நரசிம்மராவ் தேர்தல் முடிவடையும் வரை ஓர் இடைக்கால தலைவராகவே இருப்பார் எனவும், தேர்தலில் காங்கிரஸ் வெற்றியீட்டினால் வேறு ஒருவர் பிரதமராக நியமனமாகலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

காங்கிரஸின் நூறு வருடகால வரலாற்றில் தென்னிந்தியர் ஒருவரே இதுவரை வடக்கின் உத்திரப்பிரதேச மாநிலத்தை தவிர்த்து வேறு மாநிலத்தவரோ பிரதமர் பதவியை ஏற்றது இல்லை எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

நரசிம்மராவ் ஆந்திர மாநிலத்தவர் என்பதும் இந்திராவினதும் ராஜீவினதும் ஆட்சிக் காலத்தில் இவர் அமைச்சர் பதவியை வகித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### சோனியாவிடம் கோரிக்கை

ராஜீவ் காந்தியை தலைவராக கொண்டு இயங்கிய நிறுவனங்கள், தொண்டர் ஸ்தாபனங்கள் மற்றும் நிறுவனங்களின் தலைமைப் பொறுப்புகளை திருமதி சோனியாவை ஏற்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

### படம் வெளியிடப்பட்டது

ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் தேடப்பட்டுவரும் ஓர் ஆணினதும் பெண்ணினதும் படத்தை இந்திய புலனாய்வுத் துறை வெளியிட்டுள்ளது.

இவர்களை கைது செய்ய உதவுவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய விமானப்படை விமானங்கள்

### மின்னேரியா தளம் செல்லும்

இலங்கை விமானப்படைக்கு அதி நவீன ஜெட் விமானங்களை சீனா வழங்கவுள்ளதாக லண்டனில் இருந்து வெளிவரும் "ஜேன்ஸ் டிபன்ஸ் வீக்லி" என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

எவ் ரீ -5 ஜெட் விமானங்கள் இரண்டும், எவ் - 7 ரக வழி மறித்துத் தாக்கும் விமானம் ஒன்றும் சீனாவிலிருந்து தருவிக்கப்படவுள்ளது.

இவ் விமானங்கள் முதலில் கட்டுநாயக்கா விமானப்

—04 ஆம் பக்கம் பார்க்க

## சோனியா காந்திக்கு இராணுவப் பாதுகாப்பு

திருமதி சோனியா காந்திக்கு தற்போது நிலவும் சூழ்நிலையைக் கருதி முழு அரச பாதுகாப்பு அளிக்கப்படவுள்ளது. இத்தகவலை நேற்று அமைச்சர் சுபோத்கான் சஹாய் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். சோனியாவுக்கு இதன் பொருட்டு இந்திய இராணுவத்தின் விசேட பாதுகாப்பு பிரிவு ஒன்றும் அமைக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள மத்திய புலனாய்வுக்குழு கொலைக்கு

—04 ஆம் பக்கம் பார்க்க

## ராஜீவ் அஸ்தி சென்ற விமானத்துக்கு இரு மிக் விமானங்கள் பாதுகாப்பு

ராஜீவ்காந்தியின் மற்றுமோர் தொகுதி அஸ்தி நேற்று இமயமலை மீது தூவப்பட்டது.

இந்திய விமானப்படையின் ஏ. என் -32 விமானத்தில் விமானப்படையின் மேற்குப் பிரிவு தளபதி அஸ்தியை எடுத்துச் சென்றார்.

அஸ்தி தூவப்படும் போது அந்த விமானத்துக்கு விமானப்படையின் இரு மிக் விமானங்கள் இரு மருங்கிலும் பாதுகாப்பாகப் பறந்து கொண்டிருந்தன.

## புலன்விசாரணை உதவி குறித்து இந்தியத் தூதரகம் ஆராய்வு

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக புலன் விசாரணை செய்ய கொழும்பு வரும் இந்தியக் குழுவுக்கு வழங்கப்பட வேண்டிய உதவிகள் குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் இலங்கை பாதுகாப்புப் பிரிவினருடன் பேச்சு வார்த்தை நடாத்தி வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### ராஜீவுக்கு அஞ்சலி செலுத்தவந்த

## இரு மத்திய அமைச்சர்கள் தடுத்து நிறுத்தப்பட்டனர்

ராஜீவ் காந்திக்கு இறுதி மரியாதை செலுத்த வந்த இரண்டு இந்திய மத்திய அமைச்சர்களை உள்ளே செல்ல விடாது பாதுகாவலர்கள் தடுத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

உள்நாட்டின் துணை அமைச்சர் அயோத்யாசிங் சாறாய் பெற்றோலிய அமைச்சர் சத்திய பிரகாஷ் ஆகியோரே தடுக்கப்பட்டவர்களாவர்.

இவர்கள் சந்திரசேகரின் அரசில் உள்ள அமைச்சர்களென எங்களுக்குத் தெரியாது

— 04 ஆம் பக்கம் பார்க்க

### ராஜீவின் பெயரில் ராகம் ஒலிப்பதிவு

ராஜீவ் காந்தியின் பெயரில் புதிய ராகம் ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளதாம். தூரதர்ஷனின் பிரபல இசை கலை

—04 ஆம் பக்கம் பார்க்க

### அன்ரன் பாலசிங்கம் பேட்டி

## ஆதாரமின்றி குற்றஞ்சாட்டுவது கவலை தருகின்றது

எந்தவித ஆதாரங்களும் இன்றி ராஜீவ் காந்தியின் கொலைக்கு விடுதலைப் புலிகளே காரணம் என இந்திய அரசியல்வாதிகள் கூறுவது எமக்கு கவலையைத் தருகிறது. என புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் குறிப்பிட்டதாக பி. பி. ஸி. நேற்றிரவு குறிப்பிட்டது.

இதே வேளை ராஜீவின் மறைவு பற்றி மக்கள்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## ராஜீவின் படுகொலைக்கு 'இவரும்' கண்டனம்

1987 ஆம் ஆண்டு ராஜீவ் காந்தி இலங்கை வந்தபோது அவரை தாக்கிய ஸ்ரீலங்கா கடற்படை சிப்பாய் விஜேமுனி இவ்வாறும் ராஜீவின் படுகொலைக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

"ஜனாதிபதியாக்கு கிடைத்த வெற்றியே இப்படுகொலை" என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமது தாயாருக்கு ராஜீவ் காந்தி முன்னதாக வாழ்த்து கடிதம் ஒன்றை அனுப்பியிருந்ததாகவும் அவர் கூறினார்.

## கடந்த மூன்று நாள்களில் 10 படையினர் பலியாம்

அரசு ஒருதலைப்பட்சமாக அறிவித்த மூன்று நாள் யுத்தநிறுத்தத்தின் போது 10 இராணுவத்தினர் பலியானதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

வவுனியாப்பகுதியில் நடைபெற்ற மோதல் ஒன்றில் நேற்று இருபடையினர் பலியானதாகவும், மூன்று சிப்பாய்கள் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

# வவுனியா காவலரண் மீது தாக்கு

# ஆயுதங்கள் புலிகளால் மீட்பு

வவுனியா கொக்குவெளி காவலரணில் இருந்து நொச்சிமோட்டை நோக்கி வெளி வந்த படையினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடாத்தினர்.

நேற்றுக்காலை இவ்வாறு வெளியேறிய படையினர் மீது புலிகள் தமது காவலரண்களில் இருந்தவாறு நடாத்திய கடும் தாக்குதலில் இரு சிப்பாய்கள் பலியாகினர், மூவர் காயமடைந்தனர். ஏனையோர் தப்பியோடினர்;

படையினரிடமிருந்து ஏ.கே. எல். எம். ஜி -1, ரம் மகஸின் -3, ஜே. ஆர் குண்டு -2 ரீ- 81 துப்பாக்கி- 1, ரவைக்கூடுகள் -3, ஐ எம் ரவைகள்- 350 என்பன விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

## யாழ் சுகாதார ஊழியர்களுக்கென கொண்டுவரப்பட்ட

# சீருடை ராணுவத்தால் பறிப்பு!

யாழ் சுகாதாரத் திணைக்கள ஊழியர்களுக்கு வழங்கவென கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்ட பெருமளவு காக்கி நிற சீருடைத் துணிகள் அனுராதபுரத்தில் இராணுவத்தினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

யாழ் மலேரியா தடுப்புஇயக்க ஊழியர்களுக்கும் மற்றும் காவலாளிகளுக்கும் வழங்குவதற்காகவே இந்தக் காக்கி நிறத்திலான சீருடைத் துணிகளைக் கொழும்பிலிருந்து லொறி மூலம் கொண்டு வரப்பட்டிருந்தன.

இந்த சீருடைத் துணிகளை இராணுவத்தினரிடமிருந்து மீட்பதற்காக யாழ் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலக அதிகாரிகள் குழுவொன்று கொழும்புக்குச் சென்றுள்ளது. (13)

## மருத்துவரைத் திகைக்க வைக்கும் கொலம்பியாக் குழந்தை

தென்னமெரிக்காவிலுள்ள கொலம்பியா மாநிலத்திலுள்ள பாரேன்குவிலா நகரில் பிரசவத்திற்காக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்த 37 வயதுடைய ஜாட்டிடெ ஜீடா என்ற பெண் பூரண வளர்ச்சியடைந்த, பற்களைக் கொண்ட குழந்தை ஒன்றைப் பிரசவித்துள்ளார்.

ஜெல்பெட்டோ டோஜீடா என்னும் இக்குழந்தையின் நிறை 8 இறாத்தல், 6 அவுன்ஸ் சுமார் 4 கிலோ. பற்கள் பூரண வளர்ச்சியடைந்திருந்தபடியால் இக்குழந்தை தனது தாயின் கருப்பையுடன் தொடர்பு கொண்டிருந்த தொப்புள் கொடியைக் கடித்து அறுத்துக் கொண்டு பிறந்தது.

தற்போது இக்குழந்தையின் பெயர் கொலம்பியாவில் மட்டுமல்ல உலகின் பல பாகங்களிலும், மருத்துவ வட்டாரங்களில் பரபரப்பாகப் பேசப்படுகிறது. இதற்கான சரியான காரணங்களை ஆராய்வதில் மருத்துவர்கள் தமது முழுக் கவனத்தையும் செலுத்தியுள்ளனர். (48)

## விஞ்ஞானமாணி நெறி பயில ஜூன் 5 ம திகதி வரை விண்ணப்பிக்கலாம்

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் யாழ் பிராந்திய நிலையம், 1991/92 வருட விஞ்ஞானமாணி, தொழில் நுட்பவியல் டிப்ளோமா பாடநெறிகளுக்கு விண்ணப்பம் கோரியுள்ளது.

இந் நெறியில 1990 ஆம் ஆண்டில் விண்ணப்பித்தவர்கள் திரும்பவும் விண்ணப்பிக்க வேண்டியதில்லை. அவர்களுடைய முதல் நிலைப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் முன்னரே கொடுத்த முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளன. விண்ணப்பதாரிகள் 18 வயதிற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும். க. பொ. த. சாதாரண தரத்தில் விஞ்ஞானம், கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியெய்தியிருத்தல் விரும்பத்தக்கது. விண்ணப்பங்கள் யாவும் யூன்மாதம் 5ஆம்திகதிக்கு முன்னர் [illegible] யாழ் பிராந்திய நிலைய [illegible] அனுப்பப்பட வேண்டும். முதல் நிலைப் பரீட்சை யூன் மாதம் 9-ம் திகதி நடைபெறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. மேற்படி கற்கை நெறிகள் செப்டம்பர்/ஒக்டோபர் 1991 இல் தொடங்கப்படவிருக்கின்றன.

யாழ் பிராந்திய நிலையத்தில் விண்ணப்பப்படிவங்களையும், மேலதிக விவரங்களையும் திங்கள் தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 9.30 தொடக்கம் மாலை 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## பாடும்மீன் வெற்றிபெற்றது

யாழ் உதைபந்தாட்ட லீக்கினால் நடாத்தப்பட்டுவரும் 'நொக்அவுட்' முறையிலான உதைபந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற கால் இறுதிப் போட்டியில் ஒன்றுக்குப் பூச்சியம் என்ற கோல் கணக்கில் குருநகர் பாடும்மீன் கழக அணி, சென் அந்தனீஸ் அணியைத் தோற்கடித்தது. (16)

## ஆசிய வங்கி வழங்கிய 10 கோடி ரூபா பெறுமதியான
## ஆய்வுகூட உபகரணங்கள் சிங்கள பகுதிக்கு மட்டுமே

இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு வழங்கவென ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்பட்ட ஆய்வு கூட உபகரணங்கள் வடபகுதியில் உள்ள பாடசாலைகளுக்கு வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுமார்10 கோடி ரூபா பெறுமதியான இந்த ஆய்வு கூட உபகரணங்கள் நேற்று கொழும்பில் நடந்த வைபவமொன்றில் வைத்து சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர்களிடம் கையளிக்கப்பட்டன. இந்த ஆய்வு கூட உபகரணங்கள் சிங்களப் பகுதி பாடசாலைகளுக்கே வழங்கப்பட்டுள்ளன.

இது இவ்வாறிருக்க ஆசிய அபிவிருத்தி வங்கி இராணுவ நடவடிக்கைகளினால் சேதமடைந்த பாடசாலைகளைத் திருத்துவதற்கென அரசு கல்வி புனரமைப்புத் திட்டத்தின் கீழ் 60 கோடி ரூபாவினை உதவியாக வழங்கியுள்ளது.

கல்வி அமைச்சு இந்த நிதியைப்பெறுவதற்கென ஆசிய அபிவிருத்தி வங்கிக்குச் சமர்ப்பித்த நிதி கோரல் பட்டியலில் மொத்தம் 720 பாடசாலைகள் இராணுவ நடவடிக்கைகளினால் சேதமுற்றுள்ளதாகக் குறிப்பிட்டிருந்தது. இவற்றில் 570 பாடசாலைகள் வடக்கு கிழக்குப் பகுதிகளில் உள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## சீர்கேடுகள் நீக்கின

[illegible] ஏழு அதிகள் [illegible] கவிலும் நிலவிய சுகாதாரச் சீர்கேடுகள் [illegible] பகுதிக்கென புதிதாக நியமிக்கப்பட்ட பொது சுகாதாரப் பரிசோதகர் என். சச்சிதானந்தம் மேற்கொண்ட முயற்சியினால் நீக்கப்பட்டுள்ளன (18)

## கம்பன்கழக நாடக அரங்கில் கலைஞர்களுக்கு கௌரவிப்பு

அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் பத்தாவது ஆண்டு நிகழ்ச்சித்தொடரில் மூன்றாவது நிகழ்ச்சியான நாடக அரங்கு நிகழ்ச்சி அண்மையில் யாழ்ப்பாணம் கோட்டத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியின்போது யாழ்ப்பாணம் பாரம்பரிய இசை நாடக முன்னணிக் கலைஞர்களான "நாடகமாஜோதி" வி.என்.செல்வராஜ், "நாடகஜோதி" எம். கனகரத்தினம், "நடிகமணி" வி.செல்லத்துரை, நாடக அரங்க நிர்வாகத்துக்குப் பொறுப்பாக இருந்த ஆ. சபாபதி, நாடக அரங்க அமைப்பு ஒப்பனை வேலைகளைச் செய்த ஆசிரியர் [illegible] பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்ச்சியின்போது இக்கலைஞர்களினால் கோவலன், பூதத்தம்பி, வள்ளித்திருமணம், நல்ல தங்காள், சத்தியவான் சாவித்திரி, அரிச்சந்திர மயானகாண்டம் ஆகிய புகழ்பெற்ற நாடகங்களிலிருந்து முக்கிய பகுதிகள் 'காட்சியும் கானமும்' ஆக மேடையேற்றிக் காண்பிக்கப்பட்டது.

## குருபூசையும் திருமறை விழாவும் இன்று நல்லூரில் ஆரம்பம்

அகில இலங்கைத் திருமுறை மன்றம் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன், இன்று திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் குருபூசையை நல்லூர் அருள்மிகு சட்டநாதர் ஆலயத்திலும் தொடர்ந்து புராணபடனம், சோதியிற் கலத்தல் ஆகியாம் நிகழ்வுகளை நாளை வெள்ளிக்கிழமை அதே ஆலயத்திலும் நடாத்த ஏற்பாடு செய்துள்ளது.

மன்றத்தின் திருமுறைப் பெருவிழா யூன் 6 ஆம் தேதி சனிக்கிழமை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இடம்பெறுகிறது. அன்று காலை நடைபெறும் திருமுறை மாநாட்டுக்கு, இவத் தமிழ்ச்செல்வி, துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமை தாங்குவார். சிறப்புச் சொற்பொழிவுகள் திரு. ச. விநாயகமூர்த்தி, திரு. இ. குமாரசாமி ஆகிய சைவப்பெரியார்களால் நிகழ்த்தப்படும். ஆசிரிய கலாசாலைகளின் பயிலுநர் ஆசிரியர்களும், உயர்தர வகுப்பு மாணவரும் கலந்துகொள்ளும் கருத்தரங்கை, மன்றத் துணைத் தலைவர் திரு. ப. கணபதிப்பிள்ளை தொடக்கி வைப்பார்.

திருமுறை மன்றப் பதினைந்தாம் ஆண்டுப் பொதுக் கூட்டத்தைத் தொடர்ந்து பிற்பகல் நிகழ்ச்சிகளாகத் திருப்பனந்தாள் ஆதீனத் தேவார இசைமணி இரா. திருஞானசம்பந்தன் தேவார இசைமணி சி. திலைமணி, திருமுறைப் பண்ணிசைமணி வ. பரமசாமி ஆகியோரின் திருமுறைப் பண்ணிசை இடம் பெறும்.

## பாடசாலைகள் வழமைபோல்

நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு எழுவைதீவு, ஆகிய இடங்களில் உள்ள பாடசாலைகள் அனைத்தும் மீண்டும் வழமைபோல இயங்க ஆரம்பித்துள்ளன. (19)

## தொண்டர் ஆசிரியர் நேர்முகப்பரீட்சை ஜூன் 6ஆம் திகதி ஆரம்பமாகும்

யாழ் மாவட்டத்தில் தொண்டர் ஆசிரியர்களைத் தெரிவதற்கான நேர்முகப் பரீட்சை ஜூன் மாதம் 6ஆம் திகதி கோட்ட மட்டத்தில் ஆரம்பமாகவுள்ளது.

தொண்டர் ஆசிரியர்களின் சான்றிதழ்கள் இந்த நேர்முகப்பரீட்சையின் போது பரிசீலிக்கப்படும்.

இவ் ஆசிரியர்களுக்கு கடமையாற்றும் பாடசாலையிலே நியமனம் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (74)

## நாயன்மார்கட்டில் அகதிமுகாம்

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில் நாரந்தனை, ஊர்காவற்றுறை அகதிகள் தங்கி உள்ளனர்.

84 குடும்பங்களைச் சேர்ந்த 823 பேர் இங்கு தங்கி உள்ளனர்.

இந்த அகதிகள் முகாம் இம்மாதம் 3ஆம் திகதி முதல் இயங்கி வருகிறது 17

## நிருவாக சேவை தெரிவில் தமிழர் முற்றாகப் புறக்கணிப்பு

இலங்கை நிருவாக சேவைகளுக்கென அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட திறந்த போட்டிப் பரீட்சை முடிவுகளின் படி தமிழ் பரீட்சார்த்திகள் முற்றாகப் புறக்கணிக்கப் பட்டுள்ளதாகவும், இனவிகிதாசாரம் அநேகமாக அலட்சியப்படுத்தப் பட்டுள்ளதாகவும்புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1988 இல் நடைபெற்ற இப் பரீட்சைக்கான முடிவுகள் அண்மையில்தான் வெளியாகின. இந்த ஆண்டுக்கான திறந்த பரீட்சையில் இனவிகிதாசார அடிப்படையில் 48 சிங்களவர்களுக்கும், 8 தமிழர்களுக்கும், 5 முஸ்லிம்களுக்கும், 4 இந்திய வம்சாவழியினருக்கும் தெரிவில் இடமளிக்கப்பட்டாக வேண்டும்.

ஆனால்48 சிங்களவர்களும், 2 முஸ்லிம்களுமே அந்த வருடத்தில் தெரிவாகியுள்ளனர். தமிழர்கள் எவருமே தெரிவாகவில்லை.

இதே வேளை 1988 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட போட்டிப்பரீட்சையில் 16 சிங்களவர் மட்டுமே தெரிவாகியுள்ளனர். தமிழர் எவரும் தெரிவாகவில்லை.

## 'சிற்றூரவையினர் ஆயுதம் ஏந்திப் போராடுவதுதான்
## புலிகளுக்குச் செய்யும் முக்கிய உதவியாக அமையும்

விடுதலைப்புலிகள் கழுத்தில் சயனைட் குப்பிகளைக் கட்டியுள்ளனர். சயனைட் குப்பிகளைக் கட்டாத போராளிகளும் எம் மத்தியில் உள்ளனர். அவர்கள்தான் சிற்றூரவை உறுப்பினர்கள்.

இவ்வாறு நேற்று முன்தினம் மாலை அளவெட்டியில் இடம்பெற்ற கருத்தரங்கில் உரையாற்றிய விடுதலைப் புலிகளின் கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன் குறிப்பிட்டார்.

'நான் அண்மையில் தலைவர் பிரபாகரனைச் சந்தித்த போது சிற்றூரவைகளின் செயற்பாடுகள் போதியளவு வெற்றியளிக்காமல் உள்ளதாகக் குறிப்பிட்டார். இதற்குக் காரணம் இவர்கள் மக்களோடு இணைந்து செயற்படாததுதான் - அவர்கள் எதிலுமே மக்களுக்கு முன்மாதிரியாகத்தான் திகழ வேண்டும்'

சிற்றூரவை உறுப்பினர்கள் வீரம், தியாகம், மனஉறுதி, கடமை உணர்வு கொண்டவர்களாகத் திகழ வேண்டும்.

மனிதன் பிறப்பதும் இறப்பதும் ஒரு முறைதான். இதனால் சாவை எண்ணிச்சஞ்சலப்படாமல் சாவை சரித்திரமாக்க சிற்றூரவை உறுப்பினர்கள் முன்வர வேண்டும்.

சிற்றூரவை புலிகளுக்குச் செய்யும் முதலாம்பட்ச உதவி ஆயுதம் ஏந்துவதாகும். ஊர்வலத்தில் கலந்து கொள்ளல், சாப்பாடு எடுபாடு செய்தல் போன்ற உதவிகளெல்லாம் இரண்டாம் பட்சமானவையே'

'ஒருவர் விடுதலைப்புலிகள் அமைப்பில் போராளியாக இணைந்து கொண்டால் 5 சிங்கள இராணுவம் மடிகிறது. 5 சிங்கள நிலம் மீட்கப்படுகின்றது'என அவர் அங்கு தெரிவித்தார்.

## விநோத உடைப் போட்டியில் சமகால நிகழ்வுகளுக்கு முக்கியத்துவம்

விநோத உடைப் போட்டியில் சமகால நிகழ்வுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தின் 45 வது ஆண்டு நிறைவு விழாவையொட்டிய விநோத உடைப் போட்டியில் இம் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தது.

துப்பாக்கி ஏந்தியபடி கல்வி பயிலும் மாணவி, ஷெல் பட்டு இறந்த ஒருவரின் மனைவியின் துயரம் இறந்த போராளிகளின் ஆவிகள், போன்ற விநோத உடையாளர்கள் அங்கு காட்சி தந்தனர். 17

# தொண்டர்நிறுவனங்களின் உதவிப்பொருள்கள் இனி
# படையினருக்கும் பங்கிடப்படுமாம்

வடக்குகிழக்கில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கவெனப் பெறப்பட்ட உள்ளூர் வெளியூர் உதவிப் பொருள்களில் கணிசமானவற்றை வடக்கு கிழக்குப் பகுதிகளில் பணிபுரியும் படையினருக்கு வழங்குமாறு அரசசார்பற்ற நிறுவனங்கள் அரசினால் கேட்கப்பட்டுள்ளன.

அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து உதவிப் பொருள்களைப் பெற்று அவற்றைப் படையினருக்கு வழங்கவெனப் புதிதாக இந்நிறுவனப் பிரதிநிதிகளைக் கொண்ட படையினர் நலன்புரி இணைப்புக் கமிட்டியொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இக்கமிட்டிக்குப் பாதுகாப்புத் துறை உயர்அதிகாரி ஒருவரே தலைவராக நியமிக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## சொறி, சிரங்கு, வீக்கம் மாற பூவரசம்இலை நல்ல மருந்து

நம் பகுதியில் ஏராளமான பூவரச மரங்களிருக்கின்றன. பூவரச மரத்தின் இலை, காய், பூ, பட்டை இவைகள் பல வியாதிகளைக் குணப்படுத்தும் சக்தியுள்ளவை.

பூவரச மரத்தின் பழுப்பு இலைகளை எடுத்து வெய்யிலில் காய வைத்து அதைத் தீயில் போட்டு எரித்துச் சாம்பலாக்கித் தான் செய்த தேங்காய் எண்ணெயில் கலந்து சொறி, சிரங்குகளைச் சுத்தம் செய்து விட்டு மேலே பூசி வந்தால் குணமடையும்.

பூவரசம் இலையை அம்மியில் அரைத்து ஒரு சட்டியில் போட்டு லேசாக வைத்துக் களிபோலக் கிண்டி அதை வீக்கமுள்ள இடத்தில் கட்டி விட வேண்டும். தினசரி காலை மாலை புதிய களிசெய்து கட்டி வந்தால் வீக்கம் மாறும்.

## ராஜீவ் கொலைபற்றி விசாரணை நடாத்தும் இந்தியபொலிஸ்குழு கொழும்பு வருகின்றது

கடந்த செவ்வாய்க்கிழமை தமிழகம் ஸ்ரீ பெரம்புதூரில் இடம் பெற்ற குண்டுவெடிப்பு சம்பவம் சம்பந்தமாக தற்பொழுது தமிழகத்தில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் உயர்மட்ட புலனாய்வுக்குழு அடுத்த சில தினங்களில் கொழும்பு வரவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இந்தியாவில் புலனாய்வு மற்றும் பயங்கரவாதத் துறைகளில் நிபுணத்துவம் வாய்ந்த பல உயரதிகாரிகளைக்கொண்டுள்ள இக்குழு குண்டு வெடிப்பு பற்றி இலங்கையிலும் விசாரணையை மேற்கொள்ளவே கொழும்பு வருகின்றதாம்.

பி.ரி.ஐ செய்தி ஸ்தாபனம் நேற்று இத்தகவலைத் தெரிவித்தது.

## பரிசோதகர் நியமனம்

சங்கானை பொது சுகாதாரப்பரிசோதகராக எஸ். சச்சிதானந்தம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த பல வருடங்களாக இப் பதவி வெற்றிடமாக இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது. (13)

## சோனியாவே தலைவராக வேண்டுமாம்; உண்ணாவிரதமிருக்கிறார் அன்பரசு

அகில இந்திய இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பதவியை திருமதி சோனியாகாந்தி ஏற்றுக் கொள்ள வேண்டுமென வற்புறுத்தி தமிழக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இரா. அன்பரசு உண்ணாவிரதப் போராட்டமொன்றை ஆரம்பித்துள்ளார்.

இக்கருத்தினை வற்புறுத்தி இரா அன்பரசுநேற்றுகாலைக் முதல் மாலைவரை முதல் கட்டமாக சென்னையில் உண்ணாவிரதமிருந்ததாக அறிவிக்கப்படுகின்றது.

## கடலிலிருந்து கரையைநோக்கி
## மாதகல் பகுதியில் நேற்றுதாக்குதல்

சேந்தான்குளம் மாதகல் கடற் பிராந்தியத்தில் ஸ்ரீலங்கா கடற்படையினரால் கடுமையான துப்பாக்கிப் பிரயோகத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

நேற்றுக்காலை ஏழுமணியளவில் இத்தாக்குதல் நடாத்தப்பட்டது.

சேந்தான்குளம், மாதகல் மாரீசன்கூடல் 'திருவடிநிலை, சம்பில்துறை ஆகிய பகுதிகளில் கரையோரங்களை நோக்கியே தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஸ்ரீலங்கா அரசின் ஒரு தலைப்பட்ச யுத்தநிறுத்தம் அமுலில் உள்ள வேளையிலேயே ஸ்ரீலங்கா கடற்படையினரின் இத்தாக்குதல் இடம் பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (70)

## கடும்வறட்சியால் தீவகத்தில் கிணற்றுநீர் உவராக மாறுகிறது

தற்பொழுது தீவுப்பகுதியில் கடும் வறட்சி நிலவி வருவதால் குளம் கிணறுகளில் உள்ள தண்ணீர் வற்றி உப்பு நீராக மாறி வருகின்றது.

குடிதண்ணீர் பெறுவது இப்பகுதியில் பெரும் கஷ்டமாக உள்ளது. (19)

## பாலைப்பழத்தில் பாணி தயாரிப்பு ஜாமுக்குப்பதிலாக பயன்படுத்தலாம்

இவ்வாண்டு வன்னிக் காட்டுப் பகுதிகளில் பாலை மரங்கள் நன்கு காய்த்துள்ளதால் இப் பகுதி மக்களுக்கு ஓரளவு வருவாய் கிடைத்துள்ளது.

ஒரு போணி பாலைப்பழம் நாலு ரூபா வீதம் விற்பனை செய்யப்படுகிறது. அத்துடன் ஒரு போத்தல் பாலைப்பழப் பாணி 150 ரூபா வாகவும் விற்கப்படுகிறது.

இந்தப் பாணியை ஜாமுக்கு பதிலாக பாண் மற்றும் உணவுப் பொருள்களுடன் சேர்த்து உண்ணலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தப் பாணி சிறந்த போஷாக்கினையும் உடலுக்கு கொடுக்கிறது. ப 35

## வசந்தி விடுதலை

ராஜீவ் கொலையை அடுத்து கூடலூரில் வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்ட வசந்தி (40) என்னும் இலங்கைப் பெண்மணி விசாரணையின் பின்னர் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டார்.

## சென்னையில்இலங்கைப்பெண்கள் தங்கியிருக்கும் விடுதிகள் சோதனை

சென்னையில் இலங்கைத் தமிழ்ப் பெண்கள் தங்கியுள்ள வீடுகள், விடுதிகள் என்பன தற்பொழுது பொலிஸாரினால் சோதனையிடப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சென்னையில் இருந்து இச் சோதனை நடவடிக்கை தமிழகத்தின் ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படுமென சென்னை பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

## எண்ணெய்க் கப்பலில் தீ!
## 32 சிப்பந்திகள் நிலை மர்மம்

அங்கோலா ஆபிரிக்க கரையோரப் பிரதேசத்துக்கு அப்பால் எண்ணெய்க் கப்பல் ஒன்றில் ஏற்பட்ட பெருந்த வெடிப்பையடுத்து அக்கப்பலில் எடுத்துச் செல்லப்பட்ட 19 லட்சம் பீப்பா எண்ணெயில் தீப்பற்றியுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இக்கப்பல் தீப்பற்றிய சமயம் சிப்பந்திகள் உட்பட 32 பேர் அதில் இருந்ததாகவும் இவர்கள் இந்தியா, நோர்வே, சுவீடன், பிரிட்டன், ஜேர்மன், பிலிப்பைன்ஸ் பிரஜைகள் எனவும் அறிவிக்கப்படுகின்றது

இந்த 32 பேரினதும் நிலை பற்றி எதுவித தகவலும் கிடைக்கவில்லை.

## முன்னாள் பிரபல கேடிகள் 'முனா'வாக மாறுகிறார்கள்

தலைநகர் கொழும்பில் தற்போது இயங்கி வரும் சுமார் பத்துக்கு மேற்பட்ட தனியார்துறை நிறுவனங்களின் உரிமையாளர்கள் முன்னர் பிரபல கேடிகளாக இருந்தவர்களெனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

செல்வந்தர்களாக விளங்கும் இவர்களின் நிறுவனங்களில் இன்று இளைஞர், யுவதியினர் பலர் தொழில் செய்வதாகவும் பொலிஸ் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

பத்து வருட காலம் நல்ல பிரஜையாக இருந்ததின் மூலம் குற்றச் செயற்பேர்வழிகள் என்ற பட்டியலிலிருந்து இவர்களது பெயர்கள் நீக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் வட்டாரங்கள் கூறின. (11)

## கடற்றொழில் அபிவிருத்திக்கு 15 லட்சம் ரூபா நிதி; பாதிக்கப்பட்டோருக்குக் கடன் வழங்கப்பயன்படும்

யாழ் மாவட்டத்தின் கடற்றொழில் அபிவிருத்திக்கென பன்முக வரவு செலவுத் திட்டத்தில் 15 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இந் நிதி யாழ் மாவட்டத்திலுள்ள கடற்றொழில் அபிவிருத்தி அமைப்புகளுக்கு அங்கத்தவர்களின் தேவைகளை அடிப்படையில் பிரித்துக் கொடுக்கப்படவுள்ளது.

தற்சமயம் பாதிக்கப்பட்டுள்ள கடற்றொழிலாளர்களுக்கு சுழற்சிமுறையில் கடன் அடிப்படையில் இத் தொழில்கள் செய்ய ஊக்குவிப்பு நிதியாக இப் பணம் கடற்றொழில் அபிவிருத்தி அமைப்புக்களினால் வழங்கப்படும்.

யாழ் மாவட்டக் கடற்றொழில் அபிவிருத்தி அதிகாரிகளும் மக்கள் முன்னணியின் கடற்றொழில் நிர்வாகமும் இணைந்து இவ் நிதிக்கான திட்டங்களை வகுத்துள்ளது என தெரிகிறது. (ப-10)

## ஆய்வுகூடத்தில் இரசாயனமில்லை; மருத்துவ மாணவர் செய்முறை பாதிப்பு

யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மற்றும் விஞ்ஞான பீடங்களுக்கான செய்முறைப் பயிற்சிகள் பாரதூரமாக பாதிக்கப்படுத்தப்பட்ட அளவிலேயே தற்போது மேற்கொள்ளப்படுவதாகப் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த ஜூன் மாதம் முதல் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாகக் கூடும் பொருளாதாரத் தடையிலுள்ள மருத்துவ உபகரணங்கள், மற்றும் இரசாயனப் பொருள்களை வடபகுதிக்கு அனுப்புவதற்குக் கடும் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

இதனால் செய்முறைப் பயிற்சிகள் பாதிக்கப்பட்டுள்ளன. மருத்துவபீட மாணவர்கள் முன்னர் தனிமையாக மேற்கொண்ட செய்முறைப் பயிற்சிகள் தற்பொழுது நிறுத்தப்பட்டுள்ளன. (ப-11)

## கிளிநொச்சி பால் யாழ் வருகிறது ஒரு லீற்றர் 6ரூபாவுக்கு கிடைக்கும்

கிளிநொச்சி பால் சபையால் சேகரிக்கப்படும் பாலின் ஒரு பகுதியை யாழ் நகரில் விற்பனைக்கு விட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது கிளிநொச்சியில் சேகரிக்கப்படும் பால் கிளிநொச்சிப் பிரதேசத்தில் மட்டுமே விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

ஒரு லீற்றர் பாலை ஆறு ரூபாவிற்கு யாழ் நகரில் விற்பனை செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## கொழும்பில் 1000 ரூபா கள்ளநோட்டு நான்கு தமிழ் இளைஞர்கள் கைது

கொழும்பில் ஆயிரம் ரூபா கள்ள நோட்டுகள் தற்பொழுது தாராளமாக புழக்கத்திற்கு வந்திருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் 1000 ரூபா கள்ள நோட்டுக்களை மாற்ற முற்பட்ட இளைஞர் இராகிபாலம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களில் நால்வர் தமிழ் இளைஞர்கள் எனவும், இது தொடர்பாக மேலும் சிலர் தேடப்படுவதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

## 'வன்முறைபற்றி நீதிவிசாரணை இன்றேல்உண்ணாவிரதம்'-ராமராவ்

ஆந்திரப் பிரதேசத்தில் அண்மையில் நிகழ்ந்த வன்முறைகள் குறித்து சுப்பிரீம் கோர்ட் நீதிபதி விசாரணை நடத்த வேண்டும் என்றும், வன்முறையாளரைத் தண்டித்து வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடுத் தொகை வழங்க வேண்டும் என்றும், அவ்வாறு வழங்கா விட்டால் இன்று முதல் கால வரையறையற்ற உண்ணாவிரதம் இருக்கப் போவதாகவும் இந்திய தேசிய முன்னணித் தலைவர் ராமராவ் அறிவித்துள்ளார்.

உண்ணாவிரத யோசனையைக் கைவிடுமாறு ஜனதா தள் தலைவர் வி. பி. சிங் ராமராவைக் கேட்டுள்ளார்.

## தானியச் செய்கை

கிராமிய உற்பத்திக் குழுவின் ஆதரவுடன் தவசி வடக்குப் பகுதியில் தானியப் பயிர்ச் செய்கை வெற்றியளித்து வருவதாக விவசாயப் பகுதியினர் தெரிவித்தனர். (ப-11)

★ மேஜர் ஜெனரல் தேவநாயகத்தின் மரணவிசாரணையில் சாட்சியம்

# சமையலறையில் இருந்து மேஜரின் மகன் தினேஷ்

# கத்தியுடன் வெளியே வந்து என்னைத் தள்ளினார்

"தினேஷ் ஒன்றும் செய்ய வேண்டாம், ஒன்றும் செய்ய வேண்டாம். ஐயோ ஐயோ என்ற சத்தத்தைக் கேட்டு நானும் எனது மைத்துனரும் ஓடிச்சென்று ஜன்னல் ஊடாகப் பார்த்தோம்."

இவ்வாறு பவின்தா பத்ம தேவி ஸ்ரீ பத்மநாதன் (21) கல்கிசை நீதவான் பியசேன விஜயசிங்க முன்னிலையில் நடைபெற்ற மேஜர் ஜெனரல் இளையதம்பி ஜோர்ச் தேவநாயகம், அவரது மனைவி சரோஜினி தேவநாயகம், இராணுவ உதவியாளர் நந்திஸ ஆகிய மூவரது மரணம் தொடர்பான விசாரணையில் சாட்சியமளிக்கையில் கூறினார்.

தொடர்ந்து சாட்சியமளிக்கையில் அவர் கூறியதாவது எமது வீடு அமைந்துள்ள அதே பகுதியில் மேஜர் ஜெனரல் தேவநாயகத்தின் வீடு உள்ளது. அவர் எனது மாமனார்.

வெள்ளிக்கிழமை மாலை 5.8 மணியளவில் அவர் தனது மகன் தினேஷை படிப்பிக்க மேசைக்கு எடுக்குமாறு கூறியதைக் கேட்டேன். பின்னர் மேஜர் ஜெனரலின் மனைவி வீடு திரும்புவதையும் கண்டேன்.

மாலை 6 மணியளவில் நாம் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தோம். அப்போது மாமாவின் வீட்டில் இருந்து சத்தங்கள் வந்தன.

நாங்கள் மூவரும் மாமாவின் வீட்டுக்கு ஓடினோம். சமையலறையிலிருந்து அவரது மகன் தினேஷ் கத்தியுடன் வெளியே வந்தார்.

எனது தந்தையோ மருமகனோ இவ்விடயத்தில் தலையிட்டால் கொன்று விடுவேன் என்று எச்சரித்து என்னைத் தள்ளி அவர் நிலத்தில் விழ்த்தினார்.

தினேஷ் என்னை ஒன்றும் செய்யாதவாறு எனது தந்தையும் மைத்துனரும் அவரைப் பிடித்தனர் அதன் பின் தினேஷ் எனது சட்டைக் கொலரைப் பிடித்து சமையலறைக்கு என்னைக் கொண்டு சென்றார்.

அங்கே சரோஜினி தேவநாயகம் இரத்த வெள்ளத்தில் கிடந்தார். இதனைக் கண்ட நான் பீதியுடன் தினேஷின் பிடியிலிருந்து தப்பி எனது வீட்டிற்கு ஓடினேன். எனது சட்டை தினேஷின் கையில் இருந்தது. நான் உடனடியாக பொலிஸ் அவசரப் பிரிவுக்கு இச்சம்பவத்தை அறிவித்தேன் என்றார். (38)

(கொலையுண்டவரின் பெயர் தேவசகாயம் எனத் தவறாக நேற்றுப் பிரசுரமாகியுள்ளது. தவறுக்கு வருந்துகிறோம்.)

## தாக்கப்பட்டதைக் கண்டித்து தி. மு. க. உண்ணாவிரதம்

ராஜிவ்காந்தி கொல்லப்பட்டதையடுத்து தி மு கவும் அதன் தோழமைக் கட்சிகளும் எதிரணியால் தாக்கப்பட்டதைக் கண்டித்து நேற்று தமிழகத்தில் 10 மணிநேர உண்ணாவிரதம் நடைபெற்றது.

கலைஞர் கருணாநிதி தலைமையில் பல பகுதிகளிலும் நேற்று நடைபெற்ற உண்ணாவிரதம் எவ்வித வன்முறையும் இன்றி மாலை 6 மணியளவில் முடிவடைந்தது.

## கிளிநொச்சி பகுதி மக்களுக்கு உலர் உணவு பொருள் போதாது

கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் 230 மெட்றிக் தொன் உலர் உணவுப் பொருள்கள் போதாதென அம்மாவட்ட கூட்டுறவுச் சங்கங்கள் கிளிநொச்சி அரசாங்க அதிபரிடம் தெரிவித்துள்ளதாக கொழும்பிலிருந்து வரும் பத்திரிகை ஒன்று தெரிவிக்கிறது.

இந்த தொகையை 260 மெட்றிக் தொன் ஆக அதிகரிக்குமாறு இச்சங்கங்கள் அரச அதிபரிடம் கேட்டுள்ளதாகவும் அச்செய்தி மேலும் தெரிவித்தது.

அண்மையில் வவுனியா, முல்லைத்தீவு பகுதிகளில் நடைபெற்ற விமானத் தாக்குதலையடுத்து இப்பகுதியிலிருந்து பலர் வெளியேறி கிளிநொச்சி மாவட்டத்திற்குள் தஞ்சம் புகுந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (38)

## 125 லட்சம் ரூபா மோசடி வங்கி முகாமையாளர் கைது

கண்டி செங்கடகல மக்கள் வங்கிக் கிளையில் 125 லட்சம் ரூபா பணத்தை மோசடி செய்ததாக இந்த வங்கியின் முகாமையாளரும் வர்த்தகர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களைப் பொலிஸார் கண்டி நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். நீதவான் யூனை மாதம் 17 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டு பிணையில் செல்ல அனுமதித்தார். (38)

## இராணுவ உடையில் நடமாடிய இரு இளைஞர்கள் கைது

ஆயுதப்படையினரின் உடையணிந்து ஆயுதங்களுடன் நடமாடிய இரு இளைஞர்களை பொதுமக்கள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்த சம்பவம் மாத்தறை பாலட்டுவ என்ற இடத்தில் இடம்பெற்றுள்ளது.

இவர்களின் நடமாட்டத்தில் சந்தேகம் கொண்ட பொதுமக்கள் இவர்களுடன் உரையாடிய போது இவர்களின் நடத்தையில் சந்தேகம் ஏற்பட்டது. இவர்கள் தப்பியோட முயன்ற போது பொதுமக்கள் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். இவர்களிடமிருந்த துப்பாக்கி போலியானவை எனத் தெரிவிக்கப்படுகிறது. (38)

## கொழும்புக்கு வரும் கப்பல்களில் சுதந்திரக்கட்சி எம். பி. சந்தேகம்

கொழும்பில் எரிபொருள் நிரப்புவதற்காக வரும் கப்பல்கள் மீது சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் இதில் அரசாங்கம் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம். பி. தர்மசிறி சேனநாயக்கா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அண்மையில் இங்கு வந்த 'மெத்தலினா' என்ற நோர்வே நாட்டுக்கப்பலில் ஆயுதங்கள் இருந்தது தொடர்பாக அவர் விளக்கிக் கூறினார்.

இதேபோல எத்தனை பேர் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தில் எரிபொருள் நிரப்புவதாகக் கூறி வந்து போகின்றன. இவற்றில் அரசு எச்சரிக்கையாக இருக்க வேண்டும் இவ்வாறு அவர் கூறினார். 38

## ராஜீவ் கடைசிப் பேச்சு

## இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தலையிடவேண்டியுள்ளது

இலங்கையில் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இலங்கைத் தமிழர் பிரச்சினை தீர்வு காணப்படும் போல் தெரியவில்லை. பல்லாயிரக் கணக்கான தமிழ் அகதிகள் இந்தியாவுக்கு வந்துகொண்டிருக்கின்றார்கள்

இவ்வாறு மறைந்த முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்படுவதற்கு ஒரு மணித்தியாலத்துக்கு முன்னதாக பொருரிலும் பூனமலையிலும் நடைபெற்ற பொதுக் கூட்டங்களில் பேசியுள்ளார்.

இலங்கைப் பிரச்சினையில் மீண்டும் இந்தியா தலையிட வேண்டியுள்ளது. அதற்கு உறுதியான பலமான அரசாங்கம் தேவை. எனவே இந்திரா காங்கிரசை பலப்படுத்த உதவுங்கள் என்றும் ராஜீவ் காந்தி கூறியதாக சென்னைச் செய்திகள் தெரிவிக்கின்றன. 38

## ராஜீவின் படுகொலை தமிழக தேர்தல் பிரசாரத்தில்

தற்போது தமிழகத்தில் மீண்டும் ஆரம்பித்துள்ள பிரசார கூட்டங்களில் ராஜீவ் காந்தியின் கொலை முக்கிய விடயமாக பிரஸ்தாபிக்கப்படுகிறது.

இக்கொலைச்சம்பவத்தை பிரசார ஆயுதமாக கொண்டு அ. தி. மு. க- இந்திரா கொங்கிரஸ் கூட்டணியும் தி. மு. கவும் ஒன்றை ஒன்று தாக்கிப் பேசிவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

## லிபரேசன் ஒப்பரேசனில் மரணமானவர்களுக்கு அஞ்சலி

வடமராட்சிப் பகுதியில் 1987 மே மாதம் இடம்பெற்ற 'லிபரேசன் ஒப்பரேசன்' இராணுவ நடவடிக்கையின் போது அல்வாய் முத்துமாரி அம்மன் கோயிலில் தங்கியிருந்தோர் மீது ஏவப்பட்ட ஷெல்லுக்கு பலியான பொதுமக்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

அல்வாய் மனோகரா சனசமூக நிலையம், விளையாட்டுக் கழகம் என்பன அஞ்சலியைச் செலுத்தின.

முத்துமாரி அம்மன் கோயிலில் தங்கிய போது ஷெல் வீச்சுக்கு தப்பியவர்களும், இறந்தவர்களின் உறவினர்களும் அஞ்சலி செலுத்தும் போது கதறி அழுதனர். 50

## கலந்துரையாடல்

எதிர்வரும் 30 ஆம் திகதி மானிப்பாய் இந்துக்கல்லூரியில் 4 மணிக்கு முத்தமிழ் விழா தொண்டர்களாக நியமிக்கப்பட்ட வலிகாமம் பிரிவில் உள்ள மாணவர் இயக்க உறுப்பினர்கள் கலந்துரையாடல் நடைபெற இருப்பதால் சகல உறுப்பினர்களும் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

## புதிய...

படைத் தளத்தில் திறந்தப்பட்டு பின்னர் மின்னேரியா விமானத் தளத்திற்கு கொண்டுசெல்லப்படலாமெனவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது (38)

## சோனியா...

காரணமான பெண்ணை அடையாளம் காண்பதிலேயே முக்கிய கவனம் செலுத்துவதாக அமைச்சர் சஹாய் குறிப்பிட்டார்.

## இரு...

என்று பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தெரிவித்தனராம்.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடைபெறுகின்றது. (38)

## ராஜீவின்...

ஞரின் உதவியுடன் இந்த ராகத்தை ஒலிப்பதிவு செய்துள்ளது ராஜீவின் பெயரை நினைவு கூறும் தாமரையின் பெயரான கமல் ஸ்ரீராகம் என இந்த ராகத்துக்கு பெயரிடப்பட்டுள்ளது.

## ஆதாரமின்றி...

டையே எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை எனவும், முன்னர் இந்தியப் படையினரின் கடும் போக்கே மக்களின் இந்நிலைக்கு காரணமாக இருந்தது என வடபகுதி வந்து திரும்பிய பி. பி. ஸி. செய்தியாளர் குறிப்பிட்டார்.

## யாழ் பல்கலைக்கழகத்தில் திருட்டுக்கள் தொடர்கின்றன

யாழ் பல்கலைக் கழகத்தில் திருட்டுச் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருவதாக பல்கலைக் கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த வாரம் பல்கலைக் கழக கன்ரீனில் இருந்த சினி மூடையும் வேறு பல பொருள்களும் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பல்கலைக் கழகத்தில் நடைபெறும் திருட்டுச் சம்பவங்களை நிறுத்துவதற்கு துணைவேந்தர் மாணவர் பேரவையையும், மறுமலர்ச்சி கழகத்தையும் கேட்டுள்ளார். 70

## வடக்கு கிழக்கு பகுதி

## அரச ஊழியர்களுக்கு ஊக்குவிப்பு பணம் கிடைக்கும்

வடக்குக் கிழக்கில் நிலவும் சாதாரண நிலையில் அங்கு பணிபுரியும் அரச ஊழியர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை வழங்குமாறு பொது நிர்வாக மாகாண சபைகள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுச் செயலாளர் ஆர் அபயரத்னா தனது 7/91 இலக்கச் சுற்று நிருபம் மூலம் சகல திணைக்களங்களையும் கேட்டுள்ளார்.

ஊக்குவிப்புப் பணம் பெற தகுதியுள்ள அரச ஊழியர்கள் அனைவருக்கும் 1988 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் 1990 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி வரை இக்கொடுப்பனவினை வழங்கும்படியும் தேவையான பணத்தை திறைசேரியிலிருந்து எழுமெனப்படுமென்றும் அவர் அச்சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளார். 38

## தபால் பொதிகள் வந்தன இன்று விநியோகம் ஆரம்பிக்கும்

நேற்றுக்காலை கொழும்பிலிருந்து பருத்தித்துறைக்கு வந்த குமண கப்பலில் யாழ் மாவட்டத்துக்கான 304 தபால் பொதிகளில் வடமராட்சி தபாலகங்களுக்குரிய 35 தபால் பொதிகள் தவிர்ந்த 269 தபால் பொதிகள் நேற்று இரவு யாழ் பிரதம தபாலகத்தினரால் எடுத்துவரப்பட்டது.

யாழ் பிரதம தபாலகத்துக்குரிய 131 தபால் பொதிகள் இன்று தரம்பிரிக்கப்பட்டு தபால் விநியோக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனத் தபால் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். 83

இப்பத்திரிகை முரசொலி பப்ளிகேஷன்ஸ், (பிறைவேட்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி "லக்ஷ்மி பில்டிங்"இல் உள்ள அச்சகத்தில் 30 . 05 . 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.